தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி), திருச்சி-23.

ந.க.எண்.1/உ1/2026 நாள் 08.10.2026

பொருள்: தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) திருச்சி-23 – நவம்பர் 2026 – முதலாம் ஆண்டு மாணவர்கள் – தேர்வுக் கட்டணம் செலுத்துதல் – விவரங்கள் தெரிவித்தல் – தொடர்பாக.

2026 – 2027ஆம் கல்வியாண்டில் சேர்க்கைப் பெற்ற முதலாமாண்டு இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான, நவம்பர் 2026-ல் நடைபெறவுள்ள முதல் பருவ தேர்வுக்கான கட்டணம் செலுத்தும் நாள் **12.10.2026** முதல் தொடங்கப்படுகிறது. மாணவர்கள் தங்களது தேர்வுக்குரிய கட்டணத்தை QR Code (or) URL Link மூலமாக தாங்கள் இருக்கும் இடத்திலேயே இணைப்பு – 1 ல் கொடுக்கப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றி **12.10.2026** முதல் உரிய காலத்தில் கட்டணத்தைச் செலுத்தி தேர்வுக்கு தவறாமல் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் நேரடியாக தேர்வுக் கட்டணம் செலுத்தம் முறைக்குப் பதில் இணையவழியாக(Online) மட்டுமே கட்டணம் செலுத்தும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.**

பதிவு பட்டியல் (Exam Registration Galley) மாணவர்கள் சார்ந்த துறைகளுக்கு பின்னர் வழங்கப்படும். தேர்வுக் கட்டணம் செலுத்திய பின்னர் ஒவ்வொரு மாணவரும் கட்டாயம் G-Pay Trasanction எண்களை பதிவு பட்டியலில் (Exam Registration Galley) எழுதி இணையவழி ரசீதினை துறையில் ஒப்படைத்து கையொப்பமிடவேண்டும். தேர்வு கட்டணத் தொகைக்கான உரிய G-Pay Trasanction எண் மற்றும் தொகையினை எழுதிட வேண்டும்.

<u>தேர்வுக் கட்டண விவரம்</u> : (2026 – 2027 கல்வியாண்டு மாணவர்களுக்கு மட்டும்)

	ரூ.
1) பதிவுக் கட்டணம்	- 70/-
2) இளநிலை பட்ட வகுப்பு எழுத்துத் தேர்வுத் தாள் ஒன்றுக்கு	- 100/-
3) இளநிலை பட்ட வகுப்பு செய்முறைத் தேர்வு ஒன்றுக்கு	
3 மணி நேரம் தேர்வுக்கு	- 140/-
6 மணி நேரம் தேர்வுக்கு	- 280/-
4) முதுநிலை பட்ட வகுப்பு எழுத்துத் தேர்வுத் தாள் ஒன்றுக்கு	- 175/-
5) MCA பட்ட வகுப்பு எழுத்துத் தேர்வுத் தாள் ஒன்றுக்கு	- 500/-

6) (1) முதுநிலை பட்ட வகுப்பு செய்முறைத் தேர்வுத் தாள் ஒன்றுக்கு

3 மணி நேரம் தேர்வுக்கு	- 300/-
4 - 6 மணி நேரம் தேர்வுக்கு	- 400/-

(2) MCA பட்ட வகுப்பு செய்முறைத் தேர்வுத் தாள் ஒன்றுக்கு

3 மணி நேரம் தேர்வுக்கு	- 500/-
6 மணி நேரம் தேர்வுக்கு	- 700/-

(3) முதுநிலை கணினி அறிவியல் செய்முறைத் தேர்வுத் தாள் ஒன்றுக்கு - 300/-

6) மதிப்பெண் பட்டியலுக்கானக் கட்டணம் (அனைவருக்கும் பொதுவானது) - 125/-

7) அபராத கட்டணம் – 300/-

நடப்புப் பருவத் (Current Semester) தாள்களுக்கான தேர்வுக் கட்டணத்தை செலுத்தத் தவறினால், தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் அந்தக் கட்டணத்தை ரூ.500/- அபராதத்தோடு அடுத்து வரும் பருவத்தில் செலுத்துவதோடு அந்தத் தாள்களுக்கான நிலுவைத்தாள் கட்டணத்தையும் (Arrear Exam fees) செலுத்த நேரிடும் என அறிவிக்கலாகிறது.

அபராதமின்றி தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டிய காலம்: **12.10.26 முதல் 16.10.26 வரை**

அபராதம் ரூ.300/- உடன் தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டிய காலம்: : **17.10.26 முதல் 21.10.26 வரை**

தேர்வுக்கட்டணம் செலுத்திய பெயர் பட்டியலினைக் கொண்டு தேர்வு பதிவுப்பட்டியலில் பதிவு செய்து மாணவர்கள் கையொப்பம் இட வேண்டும். தேர்வு பதிவு பட்டியலில் பொறுப்பாசிரியர் கையொப்பம் இட்டிருந்தால் மட்டுமே மாணவர்கள் தேர்வுக்கு பதிவு செய்ததாக கருதப்பட்டு தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர்.

குறிப்பு : வகுப்புப் பொறுப்பாசிரியர்கள் (**Tutor-in-charge**) தத்தம் மாணவர்களுக்கு தேர்வுக் கட்டண விவரத்தை முழுமையாக தெரிவித்து உரிய காலத்திற்குள் கட்டணத்தை செலுத்தி பதிவு மேற்கொள்ள அறிவுறுத்தக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

துறைத்தலைவர்கள் அந்தந்த வகுப்புப் பொறுப்பாசிரியர் (Tutor-in-Charge) உதவியுடன் மேற்கண்ட தேர்வு பதிவுப் பட்டியலில் உள்ள பதிவுகளைச் சரிபார்த்து, மாணவர்கள் தேர்வு கட்டணம் செலுத்திய பெயர் பட்டியலினை சரிபார்த்து, பொறுப்பாசிரியர் மற்றும் துறைத்தலைவர் முத்திரையுடன் கூடிய கையொப்பமிட்டு **21.10.2026**-க்குள் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கட்டண விலக்கு

மாற்றுத்திறனாளி மாணவர்கள் தங்களது மாற்றுத்திறனாளிக்கான சான்றிதழை இணைத்து பொறுப்பு ஆசிரியர் மற்றும் துறைத் தலைவர் வழியாக முறையாக விண்ணப்பித்தால் நடப்பு பருவ தாட்களுக்கு மட்டும் கட்டண விலக்களிக்கப்படும்.

தேர்வு நெறியாளர்(பொ).

முதல்வர்.

இணைப்பு :

(1) இணையவழி(Online)கட்டணம் செலுத்தும் முறை

(2) நடப்பு பருவத் தாட்களுக்கான தேர்வுக் கட்டண விவரங்கள்.

பெறுநர்:

1. அறிவிப்பு பலகை (2)
2. அனைத்து துறைத் தலைவர்கள். (மாணவர்களுக்கு அறிவிக்கும் பொருட்டு)
3. நிதியாளர் மற்றும் கண்காணிப்பாளர்.
4. உபரி - 2.

THANTHAI PERIYAR GOVERNMENT ARTS AND SCIENCE COLLEGE,
(AUTONOMOUS)
TRICHIRAPPALLI-620023
November 2026 - 1st year Fees Amount

S.NO.	MAJOR	UG	PG
1	History	895	1245
2	Economics	895	1245
3	English	895	1245
4	Tamil	895	1245
5	Commerce	895	1245
6	Maths	795	1370
7	Physics	795	1470
8	Chemistry (Maths)	795	1695
9	Botany	795	1370
10	Zoology	795	1370
11	Geography	795	1370
12	Statistics	795	1495
13	Computer Science	795	1545
13	BCA	795	3195
14	Visual Communication	795	1495
16	Bio-Chemistry	*	1470

தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி),

திருச்சிராப்பள்ளி-23.

இணைப்பு – 1

இணையவழி கட்டணம் செலுத்தும் முறை

நவம்பர் 2026 பருவத்தேர்வுக்கு பணம் செலுத்தி இணையவழி பதிவு செய்யும் மாணவர்கள் கீழ்கண்ட நடைமுறையை பின்பற்றவும்.

Stage 1: தேர்வு நெறியாளர் அலுவல இணையதள Link-னை **www.evrcoe.com** Click செய்ய வேண்டும்.

Stage 2: Student Login ஐ தேர்ந்தெடுக்க வேண்டும்.

Stage 3: User Name மற்றும் password-ஐ உள்ளீடு செய்து login செய்ய வேண்டும்.

User Name : **Register Number** (மாணவரின் பதிவெண்)

Password : **DOB (dd-mm-yyyy)**

Stage 4: Semester Examination Fees- Tab-ஐ Click செய்ய வேண்டும்.

Stage 5: தேர்வுத்தாட்களின் பாடத்தலைப்பு மற்றும் கட்டணத் தொகை ஆகியவை காணப்படும். அதில் உள்ள தொகையினை சரிபார்த்து கொள்ள வேண்டும். இதில் நடப்பு பருவ தாட்கள்(Current Semester Papers), Internal improvement (கட்டாயமானது)

Stage 6: QR Code Payment மூலமாக சென்று இணையதளத்தில் உள்ள முழு தேர்வுக்கட்டணத் தொகை மற்றும் விபரங்களைத் தவறின்றி பூர்த்தி செய்து Payment-ஐ முடிக்க வேண்டும். முடித்த பின்னர் வரும் Transaction Id யினை 2 முறை பதிவு செய்து Submit Click செய்ய வேண்டும். பதிவு செய்த பின்னர் Transaction Id உடன் ரசீது View ஆகும் இதனை download செய்து கொள்ள வேண்டும்.

Stage 7: ரசீது download செய்த பின்னர் துறையில் ரசீதினை ஒப்படைத்து தேர்வுப் பதிவுப் பட்டியலில் **UPI அல்லது Transaction ID** (12 இலக்க எண் ; 12 digit number) குறிப்பிட்டு கையொப்பம் இட வேண்டும்.

மாணவர்கள் கட்டாயமாக தாங்கள் எழுத வேண்டிய தேர்வு தாட்கள் சரியானதா என உறுதி செய்த பின்னரே தேர்வுக்கட்டணம் செலுத்த வேண்டும். தேர்வுக் கட்டணம் செலுத்திய பின்னர் அதில் முரண்பாடுகள் இருந்தால் செலுத்திய தொகை திரும்ப தரப்படமாட்டாது

குறிப்பு: **தேர்வு கட்டண ரசீதினை இணையவழியாக பெறமுடியாத மாணவர்கள் தங்களது G-Pay Trasanction ஒளிநகலினை(Xerox) எடுத்து அதில் தங்களது பதிவு எண், பெயர் மற்றும் தொலைபேசி எண் ஆகியவற்றினை எழுதி துறைகளில் ஒப்படைத்து பதிவு பட்டியலில் (Exam Registration Galley) கையொப்பமிடலாம் எனவும் தெரிவிக்கலாகிறது.**

****